**முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**PW 2- OS. No.451/2022**

2025 ம் ஆண்டு மார்ச் மாதம் 26 ம் நாள் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி முதன்மை சார்பு நீதிபதி திருமதி.V.ஸ்ரீவித்யா, எம்.எல்., முன்னிலையில் திருமதி.ஜெயலட்சுமி கிரேடு 2 பென்ச் கிளர்க் அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் : திருமதி.கருனாம்மாள் | தொழில் : |
| க/பெ. : திரு | வயது : |
| முகவரி : | மொபைல் எண்: |

**வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி**

1. தாவா சொத்து என்னுடைய கணவரின் சொந்த சம்பாத்திய சொத்தாகும் .நான் ஒரு விடுதலை பத்திரம் தயார் செய்து என் மகள்களான செல்வி மற்றும் பானுமதி பெயருக்கு சொத்துக்களை எழுதி வைத்துவிட்டேன். என் மகள்கள் என்னை பார்த்துக் கொள்வதாக சொன்னார்கள் அதன் பெயரில் அவருக்கு சொத்தை எழுதி வைத்தேன் .என்னிடம் காட்டப்படும் சொன்ன விடுதலை பத்திரத்தை பதிவு செய்து விட்டேன். காட்டப்படும் வா.சா.ஆ. 18 ல் இருக்கும் கையெழுத்து என்னுடையது தான்.

**குறுக்கு விசாரணை**

1. என் மகள்களுக்கு விடுதலை பத்திரம் எழுதிக் கொடுப்பதற்கு நான் எந்த தொகையும் பெற்றுக் கொள்ளவில்லை என்றால் சரிதான் நான் எந்த தொகையும் பெற்றுக் கொள்ளவில்லை. எனக்கு இரண்டு பெண் பிள்ளைகள் மற்றும் இரண்டு ஆண் பிள்ளைகள் உண்டு அவர்களில் மகன்கள் பெயர் ஈஸ்வரமூர்த்தி மற்றும் மகேஷ் ஆகும். இரண்டு பெண் பிள்ளைகள் வாதிகள் ஆவார்கள் .

2. என் கணவர் வாடகைக்கு மாட்டு வண்டி ஓட்டி கொண்டிருந்தார் .அதில் அவருக்கு ஓரளவுக்கு வருமானம் வந்து கொண்டு தான் இருந்தது.ஈஸ்வரமூர்த்தி பட்டறையில் வேலை செய்து கொண்டிருந்தார். மகேஷ் ஆட்டோ ஓட்டிக் கொண்டு இருந்தார். நான் வீட்டில் தான் இருப்பேன் பால் கறந்து வியாபாரம் செய்து வந்தேன் .என் மகன்கள் சம்பாதித்து வந்த காலத்தில் அவர்கள் இருவரும் என் கணவரிடம் தங்கள் சம்பாத்தியத்தை கொடுத்துக் கொண்டிருந்தார்கள்

என்றால் ஆமாம். ஈஸ்வரமூர்த்தி எட்டாம் வகுப்பு வரை படித்திருந்தார். அதன் பின்பு பட்டறை வேலைக்கு 13 வயது முதலே சென்றுவிட்டார் என்றால் ஆமாம். ஈஸ்வரமூர்த்தி திருமணமாகும் வரை பார்க்கும் வேலையெல்லாம் செய்து கொண்டு அதிலிருந்து வரும் வருமானத்தை எங்கள் குடும்பத்து வசம் கொடுத்து வந்தார் என்று சொன்னால் சரிதான் திருமணத்திற்கு பின்னிட்டு அவர் கட்சி ஆபிஷ் சென்று விட்டார்.ஈஸ்வரமூர்த்தி நிலம் வாங்கி விற்கும் வேலை செய்து வந்தார் என்று சொன்னால் எனக்கு அது பற்றி தெரியாது.

3. என் கணவர் என்னுடைய மகன்கள் சம்பாதித்துக் கொடுத்த தொகையை வைத்து தான் இந்த தாவா சொத்தை வாங்கினால் என்று சொன்னால் சரியல்ல அவர் தன்னுடைய சொந்த சம்பாத்தியத்தில் வாங்கினார் .என்னுடைய மூத்த மகளின் கணவர் இறந்து விட்டார் .அவர் இறந்து போகும் போது 50 வயது இருக்கும் .செல்விக்கு திருமணம் ஆகும்போது 19 வயது இருக்கும் தற்போது அவருக்கு 48 வயதாகிறது பானுமதிக்கு 19 வயதில் திருமணம் ஆனது. தற்போது பானுமதிக்கு 51 வயது சுமார் இருக்கும்.

4. என்னுடைய மகள்களின் திருமணத்தின் போது ஈஸ்வரமூர்த்தி வேலை சென்று கொண்டு தான் இருந்தார் என்றால் நாங்கள் கடனுடன் வாங்கி மக்களை திருமணம் செய்து வைத்தோம் ஈஸ்வரமூர்த்தி பெரிதாக சப்போர்ட் செய்யவில்லை. என் மகள்களின் திருமணத்தின் போது ஈஸ்வரமூர்த்திக்கு திருமணமாகவில்லை என்றும் அப்போது அவர் சம்பாதித்த தொகை எல்லாம் என் கணவரிடம் தான் கொடுத்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல. ஈஸ்வரமூர்த்தி சம்பாதித்து கொடுத்த தொகையை வைத்து தான் இந்த தாவா சொத்தை வாங்கப்பட்டது என்று சொன்னால் சரி அல்ல.

5. செல்வி மற்றும் பானுமதி திருமணத்திற்கு பின்னிட்டு தங்களுடைய கணவர்களுடன் அவர்கள் வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னால் சரிதான். ஈஸ்வரமூர்த்தி 28.8.2006 தேதியில் காலமாகிவிட்டார் என்றால்சரிதான்.அதற்கு பின்பு 1.3.2019 தேதியில் மகேஷ் காலமாகிவிட்டார் என்றும் சொன்னால் ஆமாம். மகேஷுக்கு திருமணம் இல்லை அவருக்கு குழந்தைகள் யாரும் இல்லை .

6. என் கணவர் 12.5.2010 தேதியில் இறந்து போனார். ஈஸ்வரமூர்த்திக்கு இரண்டு மகன்கள். அவர்களுக்கு எந்த ஆதாரமும் இல்லை என்பதால் எங்கள் குடும்பத்திற்கு இடையே

1.1.2020 ல் ஒரு பேச்சு வார்த்தை நடந்தது என்றால் அப்படி எதுவும் இல்லை. இந்த வழக்கில் என்ன எதிர்வாதம் என்று எனக்கு தெரியாது.

7. மேற்படி பேச்சுவார்த்தையின்படி தலா 2 லட்சம் ரூபாய் பேபியிடம் வாங்கிக் கொண்டு அந்த இடத்தை அவர்களுக்கே விட்டுவிடுவதாக பாகப்பிரிவினை செய்யப்பட்டு விட்டது என்று சொன்னால் சரி அல்ல. அந்த பாகப்பிரிவினையின்படி ஏற்கனவே பிரதிவாதிகள் தான் தாவாசொத்தின் முழு உரிமையாளர்களாக இருக்கிறார்கள் என்றும் அதனால் மீண்டும் பாகப்பிரிவினை செய்ய எனக்கு அருகதை ஏதும் கிடையாது என்று சொன்னால் சரி அல்ல.

8. நான் எழுதிக் கொடுத்த விடுதலை பத்திரம் செல்லாது என்றும் அது ஒரு பெயரளவிலான விடுதலை பத்திரம் மட்டுமே என்றும் சொன்னால் சரியல்ல அந்த விடுதலை பத்திரம் இந்த பிரதிவாதிகளை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் சரியல்ல. என் மகள்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் இந்த வழக்கில் பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரி அல்ல .

**மறுவிசாரணை இல்லை**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

V SREE VIDYA

Digitally signed by V SREE VIDYA
DN: cn=V SREE VIDYA, ou=JUDICIAL JUDGE , o=THE PRINCIPAL SUBORDINATE COURT , l=TIRUPPUR, st=TAMIL NADU, c=91

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.